**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10012025-9269

Volume: 10

Issue: 1

Month: July

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.05.2025

Accepted: 20.06.2025

Published: 01.07.2025

Citation:
Muthiah, O, and
M Shanthi. 2025.
"Pottery and Cultural Transformation." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 39–46.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i1.9269

*Corresponding Author:
santhi29389@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Pottery and Cultural Transformation

**O. Muthiah**
*Senior Professor, Department of Tamil*
*Gandhigram Rural Institute – Deemed to be University, Gandhigram*

**M. Shanthi**
*Doctoral Research Scholar, Department of Tamil*
*Gandhigram Rural Institute - Deemed to be University, Gandhigram*
*http://orcid.org/0009-0003-0337-5692*

**Abstract**
*The fundamental principle of any research is that it should contribute to social development and progress. In this context, although this study may seem to simply highlight the tradition of handicrafts, it actually reveals the deeper influences of religion, society, culture, and historical background. Despite the transformations brought about by scientific advancement and industrial revolutions in culture, tradition, and civilization, earthenware items continue to be used as remnants of past traditions. Even though the value of handicrafts has declined due to cultural intermixing, pottery items still hold a stable place in cultural expressions, religious practices, and rituals. This paper focuses on the use of pottery as everyday objects and identifies the factors leading to its gradual disappearance from the cultural landscape due to social and civilizational changes. The aim of this study is to analyze these causes and propose solutions through research to preserve this cultural heritage.*

***Keywords:*** *Pottery, Handicrafts, Cultural Heritage, Traditional Crafts, Earthenware, Pottery Craft, Pottery Cultural*

**References**

1. Sakthivel, S., Folklore Studies, Manivasar Publishing House, Chennai - 2001.
2. Shanmugasundaram, S., Folklore, Manivasar Publishing House, Chidambaram - 1982.
3. Subramanian, T., Neolithic Culture in Tamil Nadu, New Century Book House (P) Lit, Chennai -2018.
4. Lourdu, T., Some basics of folk etiquette, Folk etiquette research center, Palayankottai, 2000.

# மண்பாண்டத் தொழிலும் பண்பாட்டுவயமாதலும்

***ஓ. முத்தையா***
முதுநிலைப் பேராசிரியர் மற்றும் புல முதன்மையர், தமிழ்த்துறை
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

***மு. சாந்தி***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

***முன்னுரை***

*தமிழரின் பாரம்பரியக் கைவினைத் தொழிலான மட்பாண்டம் செய்தல் என்பது தமிழர்கள் பன்னெடுங்காலமாக மட்பாண்டங்களை உருவாக்கும் தொழிலைக் குறிக்கும். தமிழ்நாட்டில் இன்றளவும் மண்பாண்டத்தொழில் பாரம்பரியக் கைவினைத் தொழிலாக நிலை பெற்றுவருகின்றது. மட்பாண்டத் தொழிற்கலையில் ஈடுபடுவோர்கள் "குயவர்" என்றும் "குலாலர்" என்றும் "வேளார்" என்றும் அழைக்கப்படுகின்றனர். குலாலர் சமுகத்தினரால் பல ஆண்டுகளாகப் பல்வேறு கிராமங்களில் மண் சிலைகள், மண்வாசனையுடன் கூடிய மண்பாண்டப்பொருட்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. மட்பாண்டத் தயாரிப்புகளுக்கு நம் முன்னோர்களிடம் நல்ல வரவேற்பிருந்தது. நம் முன்னோர்கள் மண்பானைகள், உணவுப்பாத்திரங்கள், தானியக்கொள்கலன்கள் என மண்ணாலானப் பொருட்களையே அன்றாட வாழ்வில் அதிகம் பயன்படுத்தி வந்தனர். மட்பாண்டத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. நிலக்கோட்டை பகுதியில் வாழும் மட்பாண்டத் தொழிலர்களிடம் கள ஆய்வில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மட்பாண்டம் புழங்குபொருளாகப் பயன்படுவது, அதன் பயன்பாடு பண்பாட்டு சின்னமாக விளங்குவது, நாகரீக மற்றும் சமூக மாற்றத்தின் காரணமாக மட்பாண்டமானது பண்பாட்டுச் சூழலை விட்டு விலகிச் செல்வதற்கான காரணிகள் போன்றவைப் பற்றி விரிவாக ஆராயும் முகமாக இக்கட்டுரையானது அமைகின்றது*

## மட்பாண்டம் - சொல் விளக்கம்

மண் + பாண்டங்கள் = மட்பாண்டங்கள். கண்ணுக்குப் புலப்பட நுண் துளைகள் உள்ள பாண்டப்பொருட்கள் அனைத்தும் பாண்டங்கள் எனப்படும் என மட்பாண்டத்திற்குக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகின்றது. இதன் மூலம் "பாண்டம்" என்பது "மண்பாண்டத்தையே" குறிப்பது தெளிவாகின்றது. சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட இன மக்களால் மூலப் பொருளாக மண்ணினைப் பயன்படுத்தி உருவாக்கப்படுபவையேமண்பாண்டங்கள் ஆகும். மண்பாண்டங்கள் மட்பாண்டத் தொழில் செய்யும் குயவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. மண்பாண்டத் தொழில் செய்பவர்கள் "குயவர்கள்" என்றும் "வேளார்கள்" என்றும் "குலாலர்" என்றும் அழைக்கப்படுகின்றனர். மண்பாண்டத் தொழில் செய்தல் புதிய கற்கால மனிதனின் சாதனையாகும். ஏனெனில் புதிய கற்காலத்தில் தான் சக்கரம் கண்டு பிடிக்கப்பட்டது. சக்கரம் கண்டுபிடித்தப் பிறகே மட்பாண்டத் தொழில் புதிய பரிணாமம் அடைந்தது எனக்கூறலாம்.

### இலக்கியத்தில் மட்பாண்டம்

சங்க காலத்தில் மட்பாண்டப் பொருட்கள் அனைத்தும் மக்களின் வாழ்வியலோடு இரண்டற கலந்திருந்தன. ஏனெனில் சங்க காலத்தில் மட்பாண்டங்களைப் பயன் படுத்தும் மக்கள் அதிகமாக இருந்ததுடன் மட்பாண்டப் பொருட்களின் பயன்பாடும் அதிகளவில் இருந்தது. தமிழ் இலக்கியத்தில் மட்பாண்டத் தொழில் செய்யும் குலாலர்கள், மட்பாண்டங்கள் பற்றிய குறிப்புகளும் அவற்றின் பயன்பாடு பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. சங்க பாடல்கள் மட்கலன்கள் செய்வோரை சங்க இலக்கியம் “வேட்கோ” (புறம்: 32) “கலஞ்செய்கோ” (புறம் 228, 756) என்று குறிப்பிடுகின்றது. மட்பாண்டத்தொழில் செய்பவர்கள் “வேட்கோ”, “வேளார்,” “குலாலர்”, “குயவர்” என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். சங்க காலத்தில் மட்பானைப் பயன்பாட்டில் இருந்ததை,

**கள்ளுடைத்தடவில் புள் ஒலித்து ஓவாத்**
**தேர்வழங்கு தெருவின் அன்ன**
**(நற்.227: 7-8)**

என்னும் நற்றிணைப் பாடல் வரிகள் சுட்டுகின்றன. மேலும் மட்பாண்டம் வனைய உதவும் அச்சுடன் கூடிய வண்டிச் சக்கரம் ஆரக்காலைச் சுற்றியே போய்க் கொண்டிருக்கும் என்ற செய்தியினை,

**கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே**
**அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய.**
**(புறம் - 256,1-2)**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளும் தயிர் கடைவதற்குப் பானையினைப் பயன்படுத்திய செய்தியினை,

**வெண்கோள் தோன்றாக் குழிசியொடு**
**நாள் உறை மத்தொலி கேளா தோனே**
**(புறம் - 257,11-12)**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளும் பதிவு செய்கின்றன.

### மட்பாண்டத் தொழிலின் தோற்றமும் வளர்ச்சியும்

களிமண்ணால் உருவங்களைச் செய்யும் தொழில் மிகவும் தொன்மையானது. புதிய கற்காலம் முதல் இக்காலம் வரை மண்ணினைப் பயன்படுத்தி மட்பாண்டங்களை உற்பத்தி செய்துவருகின்றனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மட்பாண்டங்களை நிழலில் உலர்த்தியும் சூளையில் இட்டும் நெருப்பில் சுட்டும் புழங்குபொருளாகப் பயன்படுத்துகின்றனர். தமிழகத்தில் மண்பாண்டத் தொழிலானது மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த மட்பாண்டப் பொருட்களைப் பயன்படுத்தி மனித வாழ்வின் தோற்றம், நாகரீகம், பண்பாடு முதலியவற்றை அறியும் சான்றாக அறிஞர் பெருமக்கள் சுட்டிக்காட்டுவதனைக் கொண்டு மட்பாண்டத்தொழிலின் தொன்மையினை எளிதில் அறிய முடிகின்றது. மனிதன் ஆற்றங்கரையில் வாழக் கற்றுக்கொண்ட நாட்களில் இருந்து மண்பாண்டம் வனைய கற்றுக் கொண்டான் (சு.சண்முகசுந்தரம், 1982: ப. 65). ஆரம்ப காலத்தில் மட்பாண்டங்கள் பெரும்பாலும் கைகளாலேயே வனையப்பட்டன. ஆரம்ப காலத்தில் வனையப்பட்ட மட்பாண்டங்களில் கூடைகளின் அச்சு காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருத்துதெரிவிக்கின்றனர். “ஆரம்ப காலத்தில் கையாலேயே மண்பாண்டங்கள் செய்யப்பட்டன. மண்பாண்டம் செய்யும் சக்கரம் புதிய கற்காலத்தில் தான் தோன்றி இருக்க வேண்டும். தொடக்க நிலையில் கையால் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்களுக்கும் சக்கரத்தால் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை” (சக்திவேல், சு : 2001: ப. 197). இவ்வாறு கைகளாலும் சக்கரத்தாலும் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்கள் பெரும்பாலும் வேலைத்திறனுடனும் கலை

நுட்பத்துடனும் உருவாக்கப்படுகின்றன. மண்பாண்டங்கள் பண்டைய வேலைத் திறனுடனும் இன்றைய கலைக் கண்ணோட்டத்துடனும் களிமண்ணால் செய்யப்படுகின்றன. மண்பாண்டம் செய்ததை மனித நாகரீகத் தொடக்க காலம் என்பர் (சக்திவேல். சு: 2001: ப. 297). இன்றும் நாட்டுப்புற கைவினைக் கலைஞர்கள் பொருட்களைத் தயாரிப்பதில் மரபு வழிக் கூறுகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

சிந்துச் சமவெளி நாகரீக காலத்தில் களிமண் பயன்பாடு குறித்த செய்திகள் காணப்படுகின்றன. அழகிய சக்கரங்கள் பூட்டிய வண்டிகள், விலங்குகள், பறவைகள் போன்ற விளையாட்டுப் பொம்மைகள் களிமண்ணால் செய்யப்பட்டன. களி மண்ணால் செய்யப்பட்ட ஒற்றைக் கொம்பு எருது, எருமை, புலி, ஆடு, பூனை, யானை போன்ற பொம்மைகள் சிந்துச்சமவெளி மக்களின் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டு களாக திகழ்கின்றன.

### மட்பாண்டப் பொருட்கள் பண்பாட்டு வயமாதல்

மக்கள் ஆரம்பகால முதல் எண்ணற்ற மரபு சார்ந்த கைவினைப் பொருட்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். மக்கள் பயன்படுத்தி வந்த எண்ணற்ற கைவினைப் பொருட்கள் கால மாற்றத்தாலும் நாகரிக வளர்ச்சியாலும் வழக்கிழந்து புதிய பொருட்களாகத் தோற்றம் பெறுகின்றன. நவீன இயந்திரங்களின் வரவால் வழக்கிழந்த எண்ணற்ற பொருட்கள் நவீன இயந்திரங்களின் பாதிப்பு மற்றும் பொருளாதார சூழல் காரணமாக மீண்டும் பண்பாட்டினைப் பெற்றுள்ளன. உதாரணமாக ஆரம்ப காலத்தில் மக்கள் உணவு சமைக்க மண் சட்டியையும் தண்ணீர் மோர் குளிர்ச்சியாக இருக்க மண்பானையினையும் உணவுப் பொருட்களானத் தானியங்கள், பருப்பு, பயறுவகைகள், உப்பு முதலிய பொருட்களைச் சேமிக்க மட்பாண்டங்களையே அதிகமாக பயன்படுத்தினர். இவ்வாறு பயன்பாட்டு அல்லது பண்பாட்டு தன்மைகளைக் கொண்ட மண் சார்ந்த கைவினைப் பொருட்கள் மெல்ல மெல்ல மக்கள் பயன்பாட்டை விட்டு விலகி சென்றன. கால மாற்றத்தாலும் நாகரீக மாற்றத்தின் காரணமாகவும் உணவு சமைக்கக் குக்கர், தண்ணீர் மோர் குளிர்ச்சியாக இருக்கக் குளிர்சாதன பெட்டியினையும் உணவுப்பொருட்களான தானியங்கள், பயிர் வகைகள் போன்ற பொருட்களைச் சேமித்து வைக்க நெகிழி அல்லது அலுமினியக் கொள்கலன்களையும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மண்பாண்டத் தொழில் என்பது மண்ணை மாண்புறச் செய்யும் தொழிலாகும். மண்பாண்டத் தொழில் குயவர்களின் அறிவாற்றலையும் கலை நுட்பத்தினையும் வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு மிகுந்த மண்பாண்டத் தொழில் இன்று ஈயம், பித்தளை, செம்பு பாத்திரங்களின் வருகையால் குறைந்துள்ளது. நம் முன்னோர்களின் பயன்பாட்டுப் பாத்திரங்களாக (புழங்கு பொருளாக) இருந்தவை மட்பாண்டங்களே.எண்ணற்ற பயன்பாடுகளைக் கொண்ட மட்பாண்டங்கள் இன்று இல்லங்களில் அலங்காரப் பொருளாக அதாவதுகாட்சிப்பொருளாகமாறிக்கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் அறிவியல் வளர்ச்சியின் தாக்கம் இருந்த போதிலும் மக்கள் இன்றும் மண்பாண்டங்களைப் பயன்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது. நகர்ப் புறங்களில் மட்பாண்டங்களைப் பயன்படுத்தும் பழக்கம் மறைந்து வருகின்றது. நகர்ப்புற மக்கள் வீட்டை அலங்கரிக்கப் பூச்சாடி, குதிரை, பொம்மைகள், வாஸ்து மணிகள் என எண்ணற்ற பொருட்களை வாங்கி காட்சிப்படுத்தி வருகின்றனர். கிராமப்புற மக்கள் இன்றும் நேர்த்திக்கடனாக ஆள் உயரம் கொண்ட குதிரைகள், யானைகள்,

மாடுகள், ஆடுகள் போன்ற விலங்கு உருவங்களையும் பறவை உருவங்களையும் பிள்ளையார், கருப்பணசாமி, அய்யனார் போன்ற தெய்வ உருவங்களையும் அழகிய வேலைப்பாடுகளுடன் நேர்த்திக்கடனாக செலுத்துகின்றனர்.

திருவிழாக்கள் என்றாலே நம் நினைவிற்கு வருவது பொங்கல் திருவிழா, கோவில் திருவிழா, திருக்கார்த்திகை திருவிழா தான். இம்மாதிரியான திருவிழாக் காலங்களில் தான் மண்பாண்டங்களின் பயன்பாடு அதிகமாக இருக்கின்றன. ஆனால் தற்போது நிலை மாறி வருகின்றது. தற்போது உலோகங்களின் பயன்பாடு அதிகமாக இருக்கின்றன. பொங்கல் வைப்பதற்குப் பெரும்பாலும் பித்தளைப் பாத்திரங்களையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். நாகரீகம் மக்களை மாற்றி இருக்கிறது. கோவில் திருவிழாக்களிலும் இதே நிலையினைத் தான் காணப்படுகிறது. முன்பு வீடுகளில் சமைக்கப் பயன்படுத்தும் பாத்திரங்களாகச் சோற்றுப் பானை, குழம்புச் சட்டி, உரிப்பானை, தட்டு என பல வகையான பாண்டங்களை மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால் இன்று இவை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. எரிவாயு அடுப்புகளின் ஆதிக்கத்தால் மண்ணால் செய்யப்பட்ட பொருட்களும் வழக்கொழிந்து வருகின்றன. புதிதாக கட்டப்படும் வீடுகளில் புகுவிழாவிற்கு மட்டும்தான் இத்தகைய அடுப்புகள் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

### மட்பாண்டங்களின் வகைப்பாடு

- புழங்குபொருள் சார்ந்த மட்பாண்டங்கள்
- சடங்கியல் சார்ந்த மட்பாண்டங்கள்
- அழகியல் சார்ந்த மட்பாண்டங்கள்

வேளாண் சார்ந்த மட்பாண்டங்கள் என்று மட்பாண்டங்களை வகைப் படுத்தலாம்.

### புழங்குபொருள் சார்ந்த மட்பாண்டங்கள் (மட்பாண்டம் புழங்குபொருளாதல்)

"புழங்குபொருள்" என்பது மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய மற்றும் பயன்படுத்துகின்ற பொருட்களைக் குறிக்கின்றது. இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலை படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கும் பொருள் சார் பண்பாடு (Material Culture) என்கிறோம் (தே லூர்து: 2004: ப. 297). புழங்குபொருள் என்பதற்குத் தமிழ் லெக்சிகன் புழங்குதல், கையாளுதல் என்று விளக்கம் அளிக்கின்றது. புழங்குபொருட்கள் என்பது மக்கள் வீட்டில் பயன்படுத்துகின்ற பொருட்களைக் குறிக்கும். பொதுவாக புழங்குபொருட்களைக் கைவினைப் பொருட்கள், கலைப்பொருட்கள் என இருவகைப்படுத்தலாம். அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் புழங்குபொருட்களைப் பயன்பாடு சார்ந்த புழங்கு பொருட்கள், சடங்கியல் சார்ந்த புழங்குபொருட்கள் என மேலும் வகைப்படுத்தலாம். புழங்கு பொருள் வகைமை குறித்து சி.மகேசுவரன் குறிப்பிடும் போது, பொதுவாக புழங்கு பொருள்களைக் "கலைப் பொருள்கள்", "கைவினைப் பொருள்கள்" எனும் இருமைப் பகுப்பு செய்வர்.

இவற்றுள், அன்றாடப் பயன்பாட்டிற்கென அமையும் புழங்குபொருள்களைப் "பயன்பாட்டுப் புழங்குபொருள்கள்" எனவும் சடங்கியல் நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் புழங்கு பொருள்களைச் "சடங்கியல் சார் புழங்குபொருள்கள்" எனவும் வகைப்படுத்தம் செய்யப்பெறும் எனக் குறிப்பிடுகிறார். (மகேசுவரன். சி. : சமூக விஞ்ஞானம், : 2020: ப. 26). மட்பாண்டத் தொழிலின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான பொருட்கள் வீட்டு உபயோகப் பொருட்களாகவும் சடங்கியல் சார்ந்த புழங்குபொருட்களாகவும் இருக்கின்றன. சங்க காலத்தில் இல்லங்களில் புழங்கு

பொருளாகத் தானியங்களைச் சேமித்து வைக்கவும் சமைப்பதற்கும் தண்ணீர் சேமித்து வைக்கவும் பானைகளையே மக்கள் பயன்படுத்தியுள்ளனர். கொத்துச் சட்டியினைத் துவரம்பருப்பு மற்றும் கீரைகள் கடைவதற்குப் பயன்படுத்தினர். தயிர் கடைவதற்குப் பானை பயன்படுத்தப்பட்ட செய்தியினை,

**வெண்கோள் தோன்றாக் குழிசியொடு**
**நாள் உறை மத்தொலி கேளா தோனே**
**(புறம் : 257:11-12)**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

மண் அடுப்பு, மண் (தண்ணீர்) பானை, மண்சட்டி, ஆப்பச்சட்டி, தோசைச் சட்டி, பணியாரச்சட்டி, பூந்தொட்டி, தண்ணீர் தொட்டி, தண்ணீர்குடிக்கும் குவளை, களிமண் பொம்மைகள் (அசையும், அசையா விளையாட்டுப் பொருட்கள்), தாலிப்பானை போன்ற பொருட்கள் வீட்டு உபயோகப் புழங்கு பொருட்களாக இல்லங்களில் இருப்பதனை இன்றளவும் நாம் காண முடிகின்றது.

### சடங்கியல் சார்ந்த மட்பாண்டங்கள்

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை எண்ணற்ற பொருட்களைப் சடங்கியல் நிலையில் பயன்படுத்தி வருகின்றான். முகூர்த்தப்பானை என அழைக்கப்படும் அரசாணிப்பானை, அகல்விளக்கு, ஆபரணங்கள், பொங்கல் பானை, களிமண் சிலைகள் போன்றவற்றைச் சடங்கியல் சார்ந்த புழங்குபொருட்களாகவும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் மண் சார்ந்த புழங்குபொருட்களையே அதிகம் பயன்படுத்துகின்றனர். இன்று கிராமங்களில் சிறு தெய்வ வழிபாட்டுச் சடங்கில் பொங்கல் பானைகள், சட்டிகள், கலயங்கள் முதலியன முக்கிய சடங்கியல் சார்ந்த பொருளாகக் கருதப்படுகின்றன. ஊர் திருவிழா நடைபெறும் காலங்களில் அதிகமாக விற்பனையாவது பானைகள் தான். இன்றும் பல்வேறு திருவிழாக்களில் குறிப்பாக ஆடி மாதத் திருவிழா, ஆற்றங்கரைத் திருவிழா, பொங்கல் திருவிழாக்களில் பானைகளைக் கிராமப்புற மக்கள் பயன்படுத்துவதனை இன்றும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தைமாதம் முதல்நாள் பெரும்பாலும் பொங்கல் வைக்க மண்பாண்டங்களைப் பயன்படுத்துகின்றனர்.

### திருமணச்சடங்கில் மட்பாண்டம்

திருமணத்தின் போது முகூர்த்தப்பானை (அரசாணிப்பானை) என்று அழைக்கப்படும் மட்பாண்டப் பொருட்கள் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. முகூர்த்தப் பானையினைத் தவிர பெரிய பானை, சிறிய பானை, கலயம், மூடி விளக்கு, நவதானியப் பானைகள் போன்றப் பொருட்களை இன்றும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

### அகல்விளக்கு

கார்த்திகை மாதத்தில் அதிகம் விற்பனையாவது அகல்விளக்கு தான். கார்த்திகைத் தீபத்திருவிழாவின் போது அகல்விளக்கினை ஏற்றிவைத்து மக்கள் இன்றும் வழிபடுகின்றனர். அகல் விளக்கானது கார்த்திகைத் தீபத்திருவிழாவினைத் தவிர கோவில்களில் விளக்கேற்ற (வேண்டுதலுக்காக நெய்தீபம் ஏற்றவும்) இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருவதனை நாம் பார்க்கமுடிகின்றது.

### இறப்புச் சடங்கில் மட்பாண்டங்கள்

இன்றும் இறப்புச் சடங்கில் கலசம், மண்பானைப் போன்றவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். சங்க காலந்தொட்டே இறப்புச் சடங்கில் மட்பாண்டங்கள் பயன்படுத்திய செய்தியினைச் சங்கப்பாடல்களில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். சங்க காலத்தில் இரண்டு பேர் உடலை வைத்துப் புதைக்கத்தக்க வகையில் பெரியதாழி வனையப்பட்ட செய்தியினை,

***வியன்மலர் அகன்பொழி ஈமத் தாழி***
***அகலிது ஆக வனைமோ***
***நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே***
***(புறம் – 256,7-9)***

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

சங்க காலத்தில் இரண்டு பேர் உடலை வைத்துப் புதைக்கத்தக்க வகையில் பெரிய தாழி வனையப்பட்ட செய்தியினைச் சங்க பாடல் வரிகள் குறிப்பிடுவதன் மூலம் தமிழகத்தில் பெரும்பாலான ஈமச் சடங்குகளில் மட்கலன்கள் பயன்படுத்தய செய்தியினை அறியமுடிகின்றது. கற்காலத்தில் மட்பாண்டமானது புழக்கத்தில் இருந்ததனை பல்வேறு வரலாற்று ஆவணங்கள் பதிவு செய்கின்றன. கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் இறப்புச் சடங்கில் மண்ணாலானத் தாழிகளைப் பயன்படுத்தினர். இறப்புச் சடங்கில் பயன்படுத்திய தாழியானது மிகவும் புனிதத் தன்மை மிக்கதாகக் கருதப்பட்ட செய்தியினை தி.சுப்பிரமணியன், தமிழகத்தில் உள்ள பெருங்கற்கால ஈமச்சடங்குகளில் மட்கலன்கள் இல்லாத ஈமச்சடங்குகளே இல்லை என்று கூறலாம். மட்கலன்கள் பெருங்கற்கால காலத்தில் புனிதமாகக் கருதப்பட்டுள்ளன என்பது ஈமச் சடங்குகளில் வாயிலாக தெரிகின்றது (தி.சுப்பிரமணியன்: 2018: பக்கம். 117) என்று குறிப்பிடுகின்றார்.

இறப்புச் சடங்கின் போது தோண்டி, சட்டி (கொள்ளி வைக்கும் சட்டி, குடம் உடைக்கும் சட்டி), கலசம், மண்பானை போன்றவற்றைத் தற்காலத்தில் பயன்படுத்தி வருவதனைக் காணமுடிகின்றது.

### அழகியல் சார்ந்த மட்பாண்டங்கள்

நகர்ப்புற மக்கள் வீட்டை அலங்கரிக்கப் (பூச்சாடி) பூந்தொட்டி, குதிரை, பொம்மைகள், வாஸ்து மணிகள் என எண்ணற்ற பொருட்களை இன்றும் அழகியல் சார்ந்த மட்பாண்டங்களாகவாங்கிகாட்சிப்படுத்தி வருகின்றனர்.

### வேளாண் சார்ந்த மட்பாண்டங்கள்

முன்பு குலாலர்களால் பெரிய அளவிளான பானைகள் தயாரிக்கப்பட்டது. அவ்வாறு தயாரிக்கப்பட்டு வந்த பானைகளானது நெல், கம்பு, சோளம், தினை, கேழ்வரகு போன்ற தானியங்களைச் சேமித்து வைக்கும் கலனாகத் திகழ்ந்தன. நமது மூதாதையர்கள் வீட்டில் வரிசை வரிசையாகப் பானைகளை அடுக்குப் பானை என்ற அமைப்பில் அடுக்கி வைத்திருப்பர். (பெரிய பானை அடிப்பகுதியிலும் அதை விடச் சிறிய பானை மேல்பகுதியிலும் அதைவிடச் சிறிய பானை என மேல்நோக்கி அடுக்கி அழகாக வைத்திருப்பதனை அடுக்குப்பானை என்று குறிப்பிட்டனர்). அழகாக அடுக்கி வைக்கப்பட்ட அடுக்குப் பானைகளை நவதானியங்கள், மளிகைப் பொருட்கள், அணிகலன்கள் போன்ற அனைத்து வகையானப் பொருட்களையும் பாதுகாத்து வைக்கும் சேமிப்புக் கலன்களாகப் பானைகளைப் பயன்படுத்தி வந்த செய்தியினை செவிவழிச் செய்தி வாயிலாக அறியமுடிகின்றது.

### மட்பாண்டங்களின் பயன்பாடு

மண் சில மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. மண்ணிற்கு மருத்துவக் குணம் இருப்பதனால் மருத்துவக் கலையோடும் தொடர்பு கொண்டுள்ளது. அக்கி என்பது பொதுவாக கோடைக் காலத்தில் ஏற்படக்கூடிய வெப்புநோய். இதற்கு மருந்து குலாலர்களால் கொடுக்கப்படுகின்றது. அக்கி ஏற்பட்ட இடத்தில் குருவி அல்லது கொக்கு வடிவலோ, சதுரம் அல்லது செவ்வக வடிவிலோ குயவர்கள் காவிக்கல்லினைப் பயன்படுத்தி வரைந்துவிட அக்கிக் குணமடைகிறது. (போஸ், மல்லனம் பட்டி, வயது: 62). மண்ணின் மூலம் சில நோய்கள் தீர்க்கப்படுவதாக இன்றளவும் மக்கள் கருது கின்றனர். நம் முன்னோர்கள் சமையலுக்கு மண்பாண்டங்களையே பயன்படுத்தி வந்தனர். மண்பானைச் சமையல் உடலுக்குக்

குளிர்ச்சி மற்றும் தெளிவான பார்வையினைக் கொடுப்பதாகக் கருதினர். நம் முன்னோர்களின் காலத்திலிருந்து நவீன காலம் வரை பயன்படுத்தப்பட்டு வந்த எண்ணற்ற மட்பாண்டப் பொருட்கள் மேலை நாட்டுக் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டினால் அழியும் நிலைக்கு வந்துவிட்டன.

## நிறைவுரை

மண்பாண்டக் கலை மிகமிகப் பழமையானது. இக்கலை இன்று பெரிது மாற்றம் பெற்றுவிட்டதாகச் சொல்ல இயலாது. மக்கள் இன்று சிறிய அளவில் மண்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். விரைவில் மக்கள் கவனம் மண்பாண்டங்கள் மீது திரும்பும் சூழல் இருப்பதால் வரும் காலங்களில் மண்பாண்டத் தொழிலுக்கு மக்கள் மத்தியில் அதிக அளவில் வரவேற்பு இருக்கும். குலாலர்கள் களிமண்ணால் உருவங்களை செய்யும் கலை மிகத் தொன்மையானது. புதிய கற்கால முதல் இக்காலம் வரை குலாலர்கள் மண்ணினைப் பயன்படுத்தி மட்பாண்டங்களை உற்பத்தி செய்து வருகின்றனர். தமிழகத்தில் மண்பாண்டத் தொழிலானது மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாக இருந்து வருகின்றது. பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளில் முதுமக்கள் தாழிகள் மற்றும் பெருந்தாழிகள் பல கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த பெரும் தாழிகளில் இறந்தவர்களை வைத்து அடக்கம் செய்யும் வழக்கம் புதிய கற்காலத்திலும் இரும்புக் காலத்திலும் காணப்பட்டதாக வரலாறு சான்றளிக்கின்றது. நாகரீகம் மக்களை மாற்றி இருக்கின்றது. கோவில் திருவிழாக்களிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. எண்ணற்ற பயன்பாடுகளைக் கொண்ட மட்பாண்டங்கள் இருந்த இடம்தெரியாமல் மாறிவருகின்றன. எரிவாயு அடுப்புகளின் ஆதிக்கத்தால் மண்ணால் செய்யப்பட்ட பொருட்களும் வழக்கொழிந்து வருகின்றன. நவீன இயந்திரங்களின் வரவால் வழக்கிழந்த எண்ணற்ற பொருட்கள் நவீன இயந்திரங்களின் பாதிப்பு மற்றும் பொருளாதார சூழல் காரணமாக மீண்டும் பயன்பாட்டினைப் பெற்றுவருகின்றன.

## துணைநூற் பட்டியல்

1. சக்திவேல். சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசர் பதிப்பகம், சென்னை -2001.
2. சண்முகசுந்தரம். சு,. நாட்டுப்புற இயல், மணிவாசர் பதிப்பகம், சிதம்பரம் -1982.
3. சுப்பிரமணியன். தி,. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை -2018.
4. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்கற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை, 2000.

## தகவலாளர் பெயர் பட்டியல்

| வ. எண் | தகவலாளர் பெயர் | வயது | ஊர் | கல்வித்தகுதி | சாதி/இனம் | தொழில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அழகுமலை | 70 | உச்சணம்பட்டி | - | குலாலர் | மட்பாண்டத் தொழில் |
| 2 | மணியம்மாள் | 60 | “ | - | குலாலர் | மட்பாண்டத் தொழில் |
| 3 | வடிவேல் | 35 | நரியூத்து | 8 -ஆம் வகுப்பு | குலாலர் | மட்பாண்டத் தொழில் |
| 4 | முருகேசன் | 58 | நரியூத்து | - | குலாலர் | மட்பாண்டத் தொழில் |
| 5 | சந்திரா | 50 | மல்லணம் பட்டி | - | குலாலர் | மட்பாண்டத் தொழில் |
| 6 | போஸ் | 62 | மல்லணம் பட்டி | - | குலாலர் | மட்பாண்டத் தொழில் |